சாட்சிகளின் வாக்குமூலம்

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 50/2021**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சித்தன் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 27.01.1943 தேதியிட்ட என்னுடைய தாத்தா கிருஷ்ணசாமிக்கவுண்டர் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.

2. 14.06.1982 தேதியிட்ட எனது தந்தை நாச்சிமுத்துக்கவுண்டருக்கும் அவரது சகோதரருக்குமிடையில் ஏற்பட்ட பாகசாசன பத்திரம் சான்றிட்ட நகல்.

3. 13.07.2005 தேதியிட்ட எனது தகப்பனாருக்கும், பிரதிவாதிக்கும் மற்றவர்களுக்கும்மிடையில் ஏற்பட்ட தடபாத்திய ஒப்பந்தம் சான்றிட்ட நகல்.

4. 02.03.2021 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரிலுள்ள சிட்டா உண்மை நகல்.

5. 24.12.2019 தேதியிட்ட எனது பெயரிலுள்ள வரி இரசீது அசல்.

6. 11.10.2018 தேதியிட்ட எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல்.

7. எனது தந்தை திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.51/2008–ன் வழக்குரை அலுவலக நகல்.

8. அ.வ.எண்.51/2008–ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை அலுவலக நகல்

9. 16.06.1982 தேதியிட்ட எனது தந்தைக்கு அவரது தாயார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் அசல்.

10. 23.04.2025 தேதியிட்ட எனது பெயரிலுள்ள வரி இரசீது அசல்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.13 18:28:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.